3. அவையுரிமைப் பிரச்சனை.

உண்மைக்குப் புறம்பான, தவறான தகவலை பேரவைக்கு அளித்ததாக திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்மீது எழுப்பப்பட்டுள்ள பிரச்சனை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதிகளின் 184-வது விதியின்கீழ் தூத்துக்குடி உறுப்பினர், திரு. ஆர். இராமலிங்கம் ஓர் அவை உரிமைப் பிரச்சினையை, (Privilege Matter) எழுப்ப அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதன் விவரம்:

To The Honourable Speaker,
Tamil Nadu Legislative Assembly,
Madras-9.

Sir,

I propose to raise a matter of privilege against hon. Member Thiru Ponnappa Nadar for making an untrue and misleading statement to the House on 29th March 1971 as follows :—

"ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டுச் சாம்பலாக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்; அந்த நிகழ்ச்சியைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்."

In '*Navasakti*', dated 30th March 1971, the Hon. Member is reported to have stated—

"ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே பொசுக்கப்பட்டது"

'A copy of the newspaper is enclosed'.

என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதன்மீது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: வன்முறைச் சம்பவங்கள் நடந்ததைப் பற்றி, கிராமம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது பற்றி முழு விவரங்கள் என்னுடைய சொற்பொழிவைப் பார்த்துத்தான், அதன் பிற்பாடுதான், என்னுடைய சமாதானத்தைச் சொல்ல முடியும். முழு விவரங்கள், என்ன பேசியிருக்கிறேன், என்ன பத்திரிகையில் வந்திருக்கிறது என்பதெல்லாம் எனக்கு இப்பொழுது நினைவு இல்லாததால், நான் எதையும் கூறுவதற்கில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அவையில் உண்மைக்குப் புறம்பாக ஒன்றைப் பேசியிருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. இந்தக் கருத்தை நீங்கள் பேசியிருக்கிறீர்கள். இது அவையின் உரிமையைப் பற்றிய பிரச்சினை. உண்மையிலேயே உரிமை மீறப்பட்டிருக்கிறதா என்று, "ப்ரைமா ஃபாஸி கேஸ்" இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கத் தங்களுடைய கருத்தைக் கேட்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசியிருப்பது, அவையினுடைய பதிவேட்டிலும் 'அதே மாதிரி ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டுச் சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்' என்று தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பத்திரிகையில் (நவசக்தி), "ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே பொசுக்கப் பட்டது" என்று வந்திருக்கிறது. பேசியது தவறு, சரியா என்பதல்ல இப்பொழுது இருக்கும் பிரச்சினை. அந்த விவரம் உண்மையாக இல்லாமலிருந்து, சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதன்மூலம், சபையை 'மிஸ்லீட்' பண்ணும் வகையில் இருக்கிறதா என்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது. அதைப் பேசலாமா பேசவேண்டாமா என்பதல்ல பிரச்னை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்ன பேசியிருக்கிறேன் என்பதைப் பார்க்காமல் என் கருத்துக்களைக் கூறுவதற்கில்லை. வேண்டுமானல், என்மீது நடவடிக்கை எடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுப்பதைப்பற்றி இல்லை, பிரச்சினை. அவையின் உரிமைபற்றியது பிரச்சினை. 'ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஒரு கிராமமே சுட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது என்று பலரும் குறிப்பிட்டிருக்கிருர்கள்' என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சியைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார் பேசியது தவரு, சரியா என்பதல்ல இப்பொழுதுள்ள பிரச்சினை. தவருன ஒரு விஷயத்தை அவையின்முன் வைத்து, உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கும் வகையில் தவருன செய்தியை, அவைக்குக் கொடுத்திருக்கிருர்கள் என்பது உறுப்பினருடைய வாதம். அந்த அளவில் அவர்கள் பேசியது அமைகிறதா, அடிப்படையில் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய நிலை இருக்கிறதா என்று ஆராயும் கட்டத்தில் பேசுகிறேம். அவையின் பதிவேடுகளில், பேசிய விவரம் இருக்கிறது. தாங்கள் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்றுலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனல், என்ன நடவடிக்கை வேண்டுமானுலும் எடுக்கலாம் என்று சொல்வது, மாண்புமிகு உறுப்பினர், அதுவும் கட்சித் தலைவராக இருக்கும் தங்களுக்கு சரியல்ல. உரிமை மீறி, 'கன்டெம்ப்ட்' வந்திருக்கிறதா, 'கன்டெம்ப்ட்' செய்திருக்கிறீர்களா என்று ஆராய வேண்டிய கட்டத்தில் இருக்கிறேம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : என்னுடைய கருத்து, என்னுடைய அறிவுக்கு, ப்ரைமா பாஸியாக, அவையின் உரிமையை மீறியதாகப் புலப்படவில்லை. ஆனல் இந்த மாதிரி விஷயங்களில் 'பிரைமா பாஸி' கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றி ஆராய்ந்து, அதற்கு என்று ஒரு முடிவு எடுப்பதும் பொருத்தமாக இருக்கும். ஆனல், திடீரென்று இதைக் கொண்டு வந்து, இதற்குத் தங்கள் கருத்து என்ன என்பதுபற்றிக் கேட்டால், உடனடியாகச் சொல்ல முடியாது என்பதைமட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(குரல்கள் : 'டுமாரோ')

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். இருந்தாலும், 'நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்' என்று சொல்வதைத் தவிர்த்து இருக்கலாம்.

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும தீர்மானத்தை ஒட்டி விவாதம் தொடரும். நேற்று நடுவில் நிறுத்திய மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி தொடர்ந்து பேசுவார்கள்.

* திரு. என். வி. குருசாமி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசியபோது, எனது தொகுதிக்கு வசதியாக வைகை அணையில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அப்படி ஆரம்பித்தால், அந்தத் தொகுதியில் வேலை